செ.வெ.எண்:26 நாள்:18.10.2020

## நாகப்பட்டினம் மாவட்டம்

## நாகப்பட்டினம் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி 2020 விற்பனையினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் துவக்கி வைத்தார்.

நாகப்பட்டினம் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி 2020 விற்பனையினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் இன்று(18.10.2020) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரவீன் பி நாயர்,இ.ஆ.ப அவர்கள் தலைமை வகித்தார். நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம்.செல்வராஜ் அவர்கள் முன்னிலை வகித்தார்.

தீபாவளி 2020 விற்பனையினை துவக்கி வைத்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

“தமிழ்நாட்டிலுள்ள பிரதம கைத்தறி நெசவாளர் சங்கங்களின் தாய்ச் சங்கமாக திகழும் **“கோ-ஆப்டெக்ஸ்”** நிறுவனம் நெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி இரகங்களை சந்தைப்படுத்தும் பணியினை 1935-ம் ஆண்டு முதல் இந்தியா முழுவதும் உள்ள தன்னுடைய 155 விற்பனை நிலையங்கள் மூலம் செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டு, இந்தியா முழுவதும் ரூ.240 கோடி விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதில் ரூ.218 கோடி அளவிற்கு விற்பனை எய்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக சுமார் 6 மாத காலமாக கடைகள் அடைக்கப்பட்டு, வியாபாரம் முழுவதும் தடைபட்டு இருந்தது. தற்போது, படிப்படியாக கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன.

கோ-ஆப்டெக்ஸ் கடலூர் மண்டலத்தின் கட்டுப்பாட்டில் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, நாகப்பட்டினம் ஆகிய நான்கு மாவட்டங்கள், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள புதுச்சேரி, காரைக்கால் சேர்த்து மொத்தம் 15 இடங்களில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இந்த ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி-2020 பண்டிகையை முன்னிட்டு கடலூர் மண்டலத்திற்கு ரூ.1360.00 இலட்சம் விற்பனைகுறியீடாகவும், அதில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள விற்பனை நிலையங்களில் நாகப்பட்டினம் விற்பனை நிலையத்திற்கு ரூ.75 லட்சமும், மயிலாடுதுறை விற்பனை நிலையத்திற்கு ரூ.150 லட்சமும், சீர்காழி விற்பனை நிலையத்திற்கு ரூ.50 லட்சமும், வேதாரண்யம் விற்பனை நிலையத்திற்கு ரூ.40 லட்சமும் விற்பனைக் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தீபாவளியை முன்னிட்டு, பல புதிய இரகங்களை அறிமுகம் செய்து வாடிக்கையாளர்களை கவர்ந்து வருகிறது. இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகையையொட்டி, புது வரவாக குறைந்த விலையில் சேலம், திருபுவனம்

பட்டுப்புடவைகள், கோவை மென்பட்டுப் புடவைகள், ஆர்கானிக் காட்டன் சேலைகள், குர்த்தீஸ்கள், லினன்/காட்டன் சட்டைகள், சுடிதார் மெட்டிரியல்கள், குல்ட் மெத்தைகள், டவல்கள், அச்சிட்ட மீரட் மற்றும் ஜெய்ப்பூர் போர்வைகள், ஏற்றுமதி இரக மகளீா் கைப்பைகள் புதியதாக அறிமுகமாகியுள்ளது.

இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகைக்காக தமிழக அரசு வழங்கும் 30% சிறப்பு தள்ளுபடி அனைத்து கைத்தறி ஆடைகளுக்கும் வழங்கப்படுகிறது. அரசுஊழியர்கள், ஆசிரியர்கள், பொதுத்துறை ஊழியர்கள், உள்ளாட்சித் துறை பணியாளர்கள் ஆகியோருக்கு கோ-ஆப்டெக்ஸ் வட்டியில்லா சுலபக்கடன் வசதி அளிக்கிறது. இந்த அரியவாய்ப்பினை அனைவரும் பயன்படுத்தி கோ-ஆப்டெக்ஸ் ஆடைகளை அணிவதுடன், இந்த சிறப்பு சலுகைகளை பெற்று பொதுமக்கள் அனைவரும் பெற்று பயன்பெற வேண்டும்.” என தெரிவித்தார்.

இவ்விழாவில் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.தமிமுன் அன்சாரி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.தங்க.கதிரவன், கோ-ஆப்டெக்ஸ் நிர்வாக குழு உறுப்பினா் திரு.கே.ஜெ.லெனின் கோ-ஆப்டெக்ஸ் கடலூர் மண்டல மேலாளர் திரு.வ.குணசேகரன், துணைமண்டலமேலாளா் திரு.பெ.ஸ்டாலின், இரக மேலாளா் திரு.ஆ.சுகுமாா் மற்றும் நாகப்பட்டினம் விற்பனை நிலைய மேலாளர் திரு.ரமேஷ் உட்பட பலா் கலந்து கொண்டனா்.

**செய்திவெளியீடு: செய்திமக்கள் தொடர்புஅலுவலகம்,நாகப்பட்டினம்.**